வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – நாராயணசாமி

தேதி 2.8.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

கடந்த 10 ஆண்டுகளில் விவசாயிகளின் ஒவ்வொரு பிரச்சனையையும் தீர்க்க தமது அரசு முழு முனைப்புடன் பணியாற்றி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

இல்லந்தோறும் தேசிய கொடி ஏற்றும் இயக்கம், இன்று முதல் வரும் 15ஆம் தேதி வரை, நடைபெற உள்ளதாக மத்திய தகவல்-ஒலிபரப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் இந்தியா 3-ஆவது இடத்தில் உள்ளது என்று மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் திரு ஜேபி நட்டா கூறி உள்ளார்.

புதுச்சேரி மாநிலம் திருநங்கைகள் தலைவி கிரிஜா நாயக்-கிற்கு வரும் ஆகஸ்டு 15-ஆம் தேதி புதுடெல்லியில் நடைபெறும் சுதந்திர தின விழாவில் கலந்து கொள்ள குடியரசு தலைவர் அழைப்பு விடுத்துள்ளார்.

*பிரதமர்*

பிரதமர் திரு நரேந்திர மோடி தனது தொகுதியான வாரணாசியில் கிசான் சம்மான் நிதியின் 20-ஆவது தவணையை நாடெங்கிலும் உள்ள 9 கோடியே 70 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளின் வங்கி கணக்குகளுக்கு 20 ஆயிரத்து 500 கோடி ரூபாயை நேரடியாக செலுத்தும் நிகழ்ச்சியில் இன்று பங்கேற்று பேசினார். அப்போது பேசிய அவர் ஆபரேஷன் சிந்தூர் வெற்றிக்கு பிறகு தான் முதல் முறையாக வாரணாசிக்கு வருவதாக கூறினார். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் மூலம் பகல்ஹாம் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்தியா நீதி வழங்கி உள்ளது என்றும் 140 கோடி மக்களின் ஒற்றுமையும் வலிமையும் தான் இந்த வெற்றிக்கு காரணம் என்று பிரதமர் கூறினார்.

கடந்த 10 ஆண்டுகளில் விவசாயிகளின் ஒவ்வொரு பிரச்சனையையும் தீர்க்க தமது அரசு முழு முனைப்புடன் பணியாற்றி வருவதாக கூறிய பிரதமர் கிசான் சம்மான் நிதியின் கீழ் இதுவரை 3 லட்சத்து 75 கோடி ரூபாய் விவசாயிகளின் வங்கி கணக்குகளுக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவித்தார். உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கு அனைவரும் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்ட பிரதமர் வரும் பண்டிகை காலங்களில் உள்ளூர் பொருட்களையே வாங்கி பயன்படுத்துமாறு மக்களுக்கு அறிவுறுத்தினார். இந்த பயணத்தின் போது, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும் தொடக்கி வைத்து, வேறு

பல திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டினார். இத்திட்டங்களின் மொத்த மதிப்பு சுமார் 2 ஆயிரத்து 200 கோடி ரூபாய் ஆகும்.

பி.எம் கிசான் திட்டத்தின் கீழ் தகுதி உள்ள விவசாயிகள் ஆண்டு தோறும் 6 ஆயிரம் ரூபாயை 3 தவணைகளில் பெறுகிறார்கள். சாகுபடி நிலங்கள் வைத்திருக்கும் சிறு மற்றும் குறு விவசாய குடும்பங்களுக்கு இடுபொருள் செலவினங்களுக்கு ஆதரவு வழங்கும் நோக்கத்தோடு இந்த தொகை அவர்களின் வங்கி கணக்குகளில் நேரடியாக செலுத்தப்படுகிறது.

இதன் ஒரு பகுதியாக புதுச்சேரி குருமாம்பேட்டில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தில் காணொளி வாயிலாக நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டப் பேரவைத் தலைவர் திரு செல்வம், தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு சாய் ஜே சரவணன் குமார், வேளாண் அறிவியல் நிலைய முதல்வரும் திட்ட ஒருங்கிணைப்பாளருமான திரு விஜயகுமார் மற்றும் அதிகாரிகள், விவசாயிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பயனாளி ஒருவர் கூறுகையில்..............

(வாய்ஸ்-விவசாயி)

இதேபோல் காரைக்கால் மாதூரில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் பிரதமரின் கிசான் சம்மான் நிதி வழங்கும் நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டது. இதில் சட்டமன்ற உறுப்பினர் திரு ஜிஎன்எஸ் ராஜசேகரன் கலந்து கொண்டு பல்வேறு நலத்திட்ட பயனாளிகளுக்கு இடுபொருள் வழங்கி சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் காரைக்கால் பண்பலை வானொலியின் மூலம் திட்டப் பயனாளிகள் தங்கள் கருத்துக்களை பதிவு செய்தனர்.

பீகார் மாநிலம் பாட்னாவில் நடைபெற்ற பி.எம் கிசான் நிகழ்ச்சியில் பங்கேற்ற மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவ்கான் கூறுகையில் விவசாயிகளின் நலனே அரசின் உயர் முன்னுரிமை என்றும் அவர்களின் உற்பத்தி பொருட்களை முன்னெடுத்துச் செல்ல சந்தை சலுகை திட்டங்களை மத்திய அரசு வழங்கி உள்ளதோடு தேவையான போக்குவரத்து வசதிகளையும் செய்துள்ளதாகவும் கூறினார். விவசாயிகளுக்கு வேளாண் கடன் அட்டைகள் மூலம் குறைந்த வட்டியில் கடன் உதவி வழங்கப்பட்டு வருவதாகவும் திரு சவ்கான் எடுத்துரைத்தார்.

கொடி

இந்திய சுதந்திரப் போராட்ட வீரரும், மகாத்மாகாந்தியின் தீவிர ஆதரவாளருமான பிங்கலி வெங்கையாவின் பிறந்த நாளான இன்று பிரதமர் திரு நரேந்திர மோடி, அவருக்கு அஞ்சலி செலுத்தி உள்ளார்.

இந்தியாவின் மூவர்ணக் கொடியை வடிவமைத்ததில் அவர் ஆற்றிய பங்கிற்காக வெங்கையா நினைவு கூறப்படுவதாக பிரதமர் தமது சமூக ஊடகப் பதிவில் கூறி உள்ளார். மூவர்ணக் கொடியை இல்லந்தோறும் பறக்க விடுவதன் மூலம் ஹர் கர் திரங்கா இயக்கத்தை வலுப்படுத்துமாறு நாட்டு மக்களை திரு மோடி கேட்டுக் கொண்டார்.

நாடு சுதந்திரம் அடைந்து 76 ஆண்டுகளை கொண்டாட உள்ள நிலையில் இல்லந்தோறும் தேசிய கொடி ஏற்றும் இயக்கம், இன்று முதல் வரும் 15ஆம் தேதி வரை, நடைபெற உள்ளதாக மத்திய தகவல்-ஒலிபரப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

2022-ஆம் ஆண்டு தொடங்கிய இந்த இயக்கத்தில் 23 கோடி வீடுகளில் தேசிய கொடி ஏற்றப்பட்டதாகவும், 6 கோடி பேர் செல்ஃபி எடுத்து இணைய தளத்தில் பதிவிட்டுள்ளதாகவும், 2023-ல் 10 கோடி பேர் வீடுகளில் தேசிய கொடி ஏற்றியபடி செல்ஃபி எடுத்து பதிவிட்டுள்ளதாகவும், அமைச்சகம் கூறியுள்ளது. இந்த ஆண்டும் இந்த நடைமுறையை சிறப்பிக்க வேண்டுமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

*ஜேபி நட்டா*

உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் இந்தியா 3-ஆவது இடத்தில் உள்ளது என்று மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர்

திரு ஜேபி நட்டா கூறினார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற 15-ஆவது தேசிய உறுப்பு தான தின விழா நிகழ்ச்சியில் பேசிய அவர், உறுப்பு தானம் என்பது துக்கத்தை நம்பிக்கையாகவும், இழப்பை வாழ்க்கையாகவும் மாற்றுகிறது என்றார். மேலும் கடந்த 2023-ல் 3 லட்சத்திற்கும் மேற்பட்டோர் தேசிய உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்பு மூலம் உறுப்புகளை தானம் செய்ய உறுதி அளித்தனர் என்றும் அவர் குறிப்பிட்டார். கடந்த ஒரே ஆண்டில் மட்டும் சுமார் 18 ஆயிரத்து 90 உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் நடைபெற்றதாக அமைச்சர் தெரிவித்தார்.

*கிரிஜா-நாயக்*

வரும் ஆகஸ்டு 15-ஆம் தேதி புதுடெல்லியில் நடைபெறும் சுதந்திர தின விழாவில் கலந்து கொள்ள புதுச்சேரி மாநில திருநங்கைகள் தலைவி கிரிஜா நாயக்-கிற்கு குடியரசு தலைவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இவர் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக திருநங்கைகளை நல்வழிப்படுத்தும் பணியில் ஈடுபட்டு வருகிறார். மேலும் பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற்று ஆதரவற்ற திருநங்கைகளுக்கு அடைக்கலம் கொடுத்து வருகிறார். இவரது முயற்சிகளைப் பாராட்டி புதுடெல்லியில் இருந்து புதுச்சேரி அஞ்சலகம் மூலமாக கிரிஜாவிற்கு சுதந்திர தின விழாவில் பங்கேற்க அழைப்பு

வந்துள்ளது. புதுச்சேரி அஞ்சலக அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் இந்த அழைப்பிதழை கிரிஜா நாயக்கிடம் நேரில் வழங்கி கவுரவித்தனர். அழைப்பிதழை பெற்றுக்கொண்ட கிரிஜா நாயக் கூறுகையில் .......

(வாய்ஸ்)-கிரிஜா நாயக்

*மீனவர்*

நாகப்பட்டிணம் மாவட்டம் வேதாரண்யத்தைச் சேர்ந்த 14 மீனவர்கள் இன்று இலங்கை கடற் கொள்ளையர்களால் தாக்கப்பட்டனர். 3 பைபர் படகுகளில் சென்று இவர்களிடம் இருந்து 5 லட்சம் ரூபாய் மதிப்புள்ள மீன்களையும் மீன்பிடி வலைகள், டீசல் கேன்கள், மற்றும், ஜிபிஎஸ் கருவிகளையும் கொள்ளையர்கள் பறித்துச் சென்றனர். கொள்ளையர்களின் தாக்குதலில் காயம் அடைந்த மீனவர்கள் நாகப்பட்டினம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

*வானிலை*

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, வரும் 7-ஆம் தேதி வரை, தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்புள்ள தமிழக கடலோர பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

*குடியரசு தலைவர்*

குடியரசு தலைவர் மாளிகையில் உள்ள பூங்காவை பொது மக்கள் வரும் 16-ஆம் தேதி முதல் அடுத்த மாதம் 14-ஆம் தேதி வரை பார்வையிடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. திங்கட்கிழமையைத் தவிர மற்ற நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை இந்த பூங்காவை பார்வையிடலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பார்வையிட விரும்புவோர் visit.rashtrapatibhavan.gov.in என்ற இணையதளத்தில் முன் பதிவு செய்து கொள்ளலாம்.

*மல்யுத்தம்*

ஏதென்சில் நடைபெற்று வரும் 17 வயதிற்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் மகளிர் 61 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் யஷிதா வெள்ளிப் பதக்கம் வென்றார். மல்யுத்த போட்டிகளின் மகளிர் பிரிவில் இந்தியா 2 தங்கம், 3 வெள்ளி 1 வெண்கலப் பதக்கம் வென்று ஒட்டு மொத்த சாம்பியன் பட்டத்தையும் கைப்பற்றியது.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

கடந்த 10 ஆண்டுகளில் விவசாயிகளின் ஒவ்வொரு பிரச்சனையையும் தீர்க்க தமது அரசு முழு முனைப்புடன் பணியாற்றி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

இல்லந்தோறும் தேசிய கொடி ஏற்றும் இயக்கம், இன்று முதல் வரும் 15ஆம் தேதி வரை, நடைபெற உள்ளதாக மத்திய தகவல்-ஒலிபரப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் இந்தியா 3-ஆவது இடத்தில் உள்ளது என்று மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் திரு ஜேபி நட்டா கூறினார்.

புதுச்சேரி மாநிலம் திருநங்கைகள் தலைவி கிரிஜா நாயக்-கிற்கு வரும் ஆகஸ்டு 15-ஆம் தேதி புதுடெல்லியில் நடைபெறும் சுதந்திர தின விழாவில் கலந்து கொள்ள குடியரசு தலைவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/02.08.2025/Script.

------------------------------